FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364158

1. District : Namakkal PS: V&Ac Year: 2026 FIR No.: 10/AC/2026 Date: 01.10.2026.
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Sections பிரிவுகள்: 7(b)
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 22.09.2026 Date to : at about 16.00 Hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 29.09.2026 Time to : at about 11.00 Hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 01.10.2026 Time : 07.15 Hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 01.10.2026 Time : 08.20 Hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 13 Kms North East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Revenue Inspector office,
முறைக் காவல் எண் முகவரி Alangaratham Firka, Namakkal District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Chandrasekaran (b) Father's/ Husband's Name : K. Periyasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date /Year of Birth : Age 52 (d) Nationality : Hindu (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Private Employee Address : D.No. 3/61 Middle Street, Palapatty Village,
தொழில் முகவரி Alangaratham (P.O) Sendamangalam (T.K)
Namakkal (Dt) 637013

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Jayaraman, Revenue Inspector, Alangaratham Firka,
Sendamangalam (T.K), Namakkal District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட /களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted

Separate sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P.Chandrasekar 01/10/2026

01/10/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 01.10.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 10.00 Hrs.

Name: பெயர் M. SUBASHINI
Rank: நிலை .....No. எண் .....
Deputy Supdt. of Police
VOC, Nanguneri.

நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 10/AC/2026, u/s. 7(b) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...,

இன்று 01.10.2026-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 07.15 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு-காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, வழக்கின் புகார்தாரர் திரு.P.சந்திரசேகரன் (வயது-52), த/பெ.K.பெரியசாமி, க.எண்.3/61, நடுத்தெரு, பாலப்பட்டி கிராமம், அலங்காநத்தம் அஞ்சல், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம்-637013 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் திரு.P.சந்திரசேகரன், த/பெ.K.பெரியசாமி, க.எண்.3/61, நடுத்தெரு, பாலப்பட்டி கிராமம், அலங்காநத்தம் அஞ்சல், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம்-637013. பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, நாமக்கல் மாவட்டம். அம்மா, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், அலங்காநத்தம் அஞ்சல் பாலப்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ மாசி பெரியசாமி கோவில் நான் வழிபடும் குலதெய்வமாகும். சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு வசிக்கும் 50 குடும்பங்கள், பங்காளிகள் பாரம்பரியமாக எங்கள் குலதெய்வத்தை வழிபட்டு வருகின்றோம். நான் மேற்படி கோவிலின் அறக்கட்டளை செயலாளராக உள்ளேன். எங்கள் கோவில் நிலமானது பாலப்பட்டி கிராம சர்வே எண். 466/39 விஸ்தீரணம் 0.0200.0 ச.மீ. வருவாய்த்துறை ஆவணங்களில் சர்க்கார் புறம்போக்கு குறிப்பு காலத்தில் கோவில் என வகைப்பாட்டில் அமைந்துள்ளது. மேலும் எங்களுடைய கோவிலுக்கு அலங்காநத்தம் பஞ்சாயத்தால் கதவு எண்.3/95A என வழங்கப்பட்டு முறையான மின்இணைப்பு எண்.04204005753 பெற்று பயன்படுத்தி வருகின்றோம். எங்கள் கோவில் நிலத்துக்கு அருகில் வடபுறத்தில் பாலப்பட்டி கிராம சர்வே எண். 466/38-ல் உள்ள நிலம் திரு.அவினாசி என்பவருக்கு சொந்தமான நிலமாகும். அதில்

திரு.அவினாசி அவர்களின் மகன் திரு.ஆறுமுகம் மற்றும் குடும்பத்தினர் குடியிருந்து வருகிறார். அந்த வீட்டை இடித்துவிட்டு 2023-ல் புதிதாக வீடுகட்ட தொடங்கும் போது எங்கள் கோவில் நிலத்தின் வடக்கு பக்கம் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்து சட்ட விரோதமாக வீடு கட்டிக்கொண்டு வந்தார். இது பற்றி நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்துறையினரிடம் ஸ்ரீ மாசி பெரியசாமி கோவில் பங்காளிகள் மற்றும் தர்மகர்த்தாக்கள் சார்பாக திரு.வேலுசாமி என்பவர் மனு கொடுத்த பிறகு VAO மற்றும் சர்வேயர் ஆகியோர் சம்பந்தப்பட்ட இடத்தை நேரில் பார்வையிட்டு அளவீடு செய்து 0.0018.0 ச.மீ. கோவில் நிலத்தை திரு.ஆறுமுகம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று சேந்தமங்கலம் வட்டாட்சியருக்கு அறிக்கை சமர்பித்துள்ளனர். இதனை தொடர்ந்து சேந்தமங்கலம் வட்டாட்சியர் எந்தவித துரித நடவடிக்கையும் எடுக்காதபடியால் திரு.வேலுசாமி அவர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.10669/2024-ன் படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்கில் கடந்த 30.03.2026-ம் தேதி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட செயலுறுத்தும் நீதி பேராணையில், 12 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க சேந்தமங்கலம் வட்டாட்சியர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு நான் மாவட்ட ஆட்சியருக்கு இ-மெயில் வழியாக 19.05.2026-ல் எனது மனுவுடன் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு மற்றும் பாலப்பட்டி கிராம சர்வே எண். 466/39-ல் ஆக்கிரமித்து கட்டிய வீட்டிற்கு பட்டா கோரிய திரு.ஆறுமுகம் விண்ணப்பத்தை நிராகரித்து வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த ஆணை ஆகியவற்றை இணைத்து அனுப்பினேன். அதனை தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலரும் திரு.ஆறுமுகம் அவர்களுக்கு பட்டா வழங்க இயலாது என 01.07.2026 அன்று உத்தரவிட்டார். அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் 14.08.2026 அன்று மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்ற சேந்தமங்கலம் வட்டாட்சியர் அவர்களுக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவினை நிறைவேற்றும் பொருட்டு 10.09.2026

வியாழக்கிழமை அன்று வருவாய் துறையினர் மற்றும் இரண்டு காவலர்கள் அடங்கிய குழு ஆக்கிரமிப்பினை அகற்ற வந்தனர். போதிய போலீஸ் பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் அன்றைய நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. பாலப்பட்டி கிராம உதவியாளர் திரு.சந்திரகுமார் 21.09.2026 அன்று என்னை போனில் அழைத்ததின் பேரில் நான் அலங்காநத்தம் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் சென்று அவரை சந்தித்தபோது, 22.09.2026 அன்று ஆக்கிரமிப்பு அகற்றுவதற்காக சேந்தமங்கலம் வட்டாட்சியர் அவர்கள் நாமக்கல் காவல் துணை கண்காணிப்பாளருக்கு பாதுகாப்பு கேட்டு அனுப்பிய கடிதத்தின் நகல் எனக்கு வழங்கினார். அவர் சென்ற பிறகு அங்கிருந்த அலங்காநத்தம் வருவாய் ஆய்வாளர் திரு.ஜெயராமன் அவர்கள், என்னிடம் JCB செலவு, டீ, சாப்பாடு, வீடியோ எடுப்பதற்கு ஆகும் அனைத்து செலவையும் தாங்கள் செய்ய வேண்டும் என்றும், எனக்கும் ஏதாவது பார்த்து செய்யுங்கனு என்னிடம் சொன்னார். என்ன செய்ய வேண்டும் என்று நான் கேட்டபோது அவர் வேலை முடிந்தவுடன் பிறகு சொல்கிறேன் என்று என்னிடம் சொன்னார். அதன்படி 22.09.2026 அன்று காலையில் மேற்படி ஆக்கிரமிப்பை வருவாய் துறையினர் அகற்றினர். அன்றே அலங்காநத்தம் வருவாய் ஆய்வாளர் திரு.ஜெயராமன் அவர்கள் தன்னை வந்து தனியாக பார்க்குமாறு என்னிடம் சொன்னார். அவர் சொன்னதன் பேரில் அன்று மாலை சுமார் 4 மணிக்கு அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது ஆக்கிரமிப்பை அகற்றியதற்கு எனக்கு தனியாக கவனிக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் பிறகு பார்க்கிறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். அதன்பிறகு எனது வேலை விசயமாக திருச்சி சென்றுவிட்டு 28.09.2026 அன்று நாமக்கல் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், சேந்தமங்கலம் வட்டாட்சியர் ஆகியோருக்கு, ஆக்கிரமிப்பை அகற்றியதற்கு நன்றி சொல்லிவிட்டு பிறகு 29.09.2026 அன்று காலை சுமார் 11 மணிக்கு வருவாய் ஆய்வாளர் திரு.ஜெயராமன் அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து நன்றி சொன்னபோது, ஏற்கனவே நான் ஏற்கனவே சொன்ன விசயம் என்னாச்சு

என்று கேட்டார், ஏற்கனவே சார் சொன்னமாதிரி JCB செலவு, டீ, சாப்பாடு, வீடியோ எடுப்பதற்கு ஆன அனைத்து செலவையும் நான் செய்துள்ளேன் என்று சொன்னேன். என்னோட முயற்சியில் தான் ஆக்கிரமிப்பை அகற்றினேன், அதனால் எனக்கு தனியாக பத்தாயிரம் ரூபாய் கொடுத்துடுங்க என்று சொன்னார். அதற்கு நான் வேலை விசயமாக திருச்சி போகிறேன், திரும்பி வந்த பிறகு பார்க்கிறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். எனக்கு வருவாய் ஆய்வாளர் திரு.ஜெயராமன் தனது கடமையை செய்ததற்கு என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க விருப்பமில்லை. அவர் கேட்ட லஞ்சப் பணத்துடன் இன்று அவரை சந்திக்க உள்ளேன். எனவே, அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx (P.Chandrasekaran) 01/10/2026.

Sir,

I received the above computer typed complaint on 01.10.2026 at 07.15 hrs and the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity of the accused was also verified through sources and which is learnt to be not good. The motive and antecedents of the complainant with the accused have been checked carefully and found nothing adverse. Hence, I obtained oral concurrence from the DVAC, Chennai and I registered a case in Namakkal Vigilance and Anti-Corruption Crime No.10/AC/2026, u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 01.10.2026 at 08.20 hrs against the accused Tr.Jayaraman, Revenue Inspector, Alanganatham Firka, Sendamangalm Taluk, Namakkal District. Sd/-(xxxx) 01/10/26. (M.SUBASHINI), DSP, VAC, Namakkal-dt.

The original FIR along with original computer typed complaint of the informant Tr.P.Chandrasekaran are submitted to the Hon'ble Court of Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned and I took up investigation.

DSP 1/10/26.

(M. SUBASHINI)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.